1982 மார்ச் 25]

அண்ணா தி. மு. க. சங்கம், மற்றும் பல்வேறு சங்கங்கள் சேர்ந்து கோரிக்கை வைத்ததால் அங்கே கடைகள் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, பொதுவாக அரசினுடைய இடத்திலே கடை வைத்திருக்கிறவர்கள் அல்லது ஆக்கிரமிப்பு செய்திருக்கிறவர்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் உயர்நீதிமன்றத்திற்கு அல்லது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றால் பேசிஸ் இல்லாமல் கூட ஸ்டே கொடுத்து விடுகிறார்கள். இது சரியா ? அரசாங்கம் இதற்கு ஒரு முடிவு செய்து, அரசுக்குச் சொந்தமான அல்லது புறம்போக்கு நிலத்தில் தகாத முறையில் ஆக்கிரமிப்புச் செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஆக்கிரமிப்பு செய்வது சரியா, முறையா என்ற கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால், அவர்கள் ஆட்சிக் காலத்தில் கூட இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அவர்கள் நீதிமன்றத்தில் தடை பெற்றிருக்கிறார்கள். அதன்பிறகு நீக்கப்பட்டார்கள் அல்லது தொடர்ந்து இருக்கிறார்கள் என்ற வரலாறு இருக்கிறது. ஆக்கிரமிப்பு என்பது எந்த ஆட்சிக் காலத்திலும் இருந்து வருகிறது. ஆனால் ஆக்கிரமிப்புகளை தவிர்க்க நாம் நடவடிக்கை எடுக்கிறோம். நீதிமன்றத்தில் தடை கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே, இதுபற்றி நீதிமன்றம்தான் தீர்ப்பு கொடுக்க வேண்டும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நடைபாதைக் கடைகள் அனுமதிக்கப்பட்டு இருந்தும், ஒவ்வொரு நாளும் போலீஸ் தொந்தரவு இருப்பது உடனடியாக நிறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நாம் அனுமதித்த கடைகள் தவிர மற்றக் கடைகள் வருமானால், போலீஸ் தொந்தரவு கண்டிப்பாக இருக்கும்.

சென்னை கீழ்ப்பாக்கம் மனநிலை மருத்துவமனைக் கட்டிடங்கள்,

* வினா எண் 655—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை கீழ்ப்பாக்கம் மனநிலை மருத்துவமனை கட்டிடங்கள சுகாதாரக் கேடாகவும், பழுதடைந்துள்ள நிலைமையிலும் இருந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) கட்டிடத்தை புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இந்த கட்டிடங்கள் மிகவும் பழைய கட்டிடங்கள்.

(ஆ) நிதி நிலைமைக்கு ஏற்பச் சில கட்டிடங்கள் மட்டும் பழுதுபார்க்கப்பட்டன.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவ மனைக் கட்டிடம் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடமாகும். அதை நான் நேரடியாகப் பார்த்து இருக்கிறேன். கைகள் (ரீப்பர் கட்டைகள்) தொங்கிககொண்டு இருக்கின்றன. ஆங்காங்கு மண் உதிர்கிறது. லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அப்பாரட்டஸ் அங்கே வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மீது மண் விழுந்து பழுதடைந்து விடுமோ என்கிற ஒரு அச்சம் இருக்கிறது. ஆகவே, அதற்குப் புதிய கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிய கட்டிடம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும், அண்மையிலே பெண்களுக்காக ஒரு தனி வார்டு (விமன்ஸ் வார்டு) 6 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் மிக விரைவாக வேலைகள் ஆரம்பிப்பதற்கான வகையில நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டுதோறும் அந்தக் கட்டிடம் பழுதுபார்க்கப்பட்டு வருகிறது. 1978—79ல் 1 லட்சம் இதற்காகச் செலவழிக்கப்பட்டுள்ளது. 1979—80-ல் ரூ. 2 லட்சத்து 47 ஆயிரம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1980—81-ல் ரூ. 2 லட்சத்து 68 ஆயிரம் செலவழிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு (1981—82) மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி முடிய நிதியாண்டு இருந்தாலும், ஒரு 10 மாத காலத்தில் ரூ. 1 லட்சத்து 59 ஆயிரம் பழுதுபார்ப்பதற்காக செலவழிக்கப்பட்டுள்ளது. ஆகவே தொடர்ந்து பழுது பார்க்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு அங்கே இருக்கும் கட்டிட அமைப்பு விலையுயர்ந்த அந்த மெஷின்கள் கெட்டுப்போகும் அளவிற்கு இருப்பதால், லட்சக்கணக்கான மெஷின்களைக் காப்பாற்றுவதற்காகவாவது அந்தக் கட்டிடத்தை சீர்படுத்த உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நிச்சயமாகச் செய்யப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லட்சக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டதாக சொன்னார்கள். அப்படி ஒதுக்

கப்பட்ட பணம் அந்த வேலைகளுக்காக முழுமையாக செலவழிக்கப்பட்டு இருக்கிறதா? அந்த வேலைகளைக் கான்ட்ராக்ட் முறையில் கொடுத்து இருப்பதால் தாமதப் படுகிறதா ? அதை விரைவில் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அங்கே பழுதுபார்ப்பதற்காக 1 லட்ச ரூபாய், 2 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்ட தொகை என்று நான் சொல்லவில்லை. அதற்காக செலவழிக்கப்பட்டது என்று தான் சொன்னேன். அது ஒரு பெரிய மருத்துவ மனை. அதற்கு ஒரு லட்ச ரூபாய். இரண்டு லட்ச ரூபாய் என்று ஒதுக்கினால் கூட அது போதாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, நமக்கு இருக்கும் நிதிநிலைமை களுக்கு ஏற்ப அந்த வேலைகளைச் செய்யவேண்டி இருக்கிறது. இந்த ஆண்டு 6 லட்ச ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் பெண்களுக்கான வார்டு அமைப்பதற்காக கூட முயற்சி எடுத்து இருக்கிறோம். அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். அது முழுமையாகச் செலவிடப்படும். ஜாஸ்தியாகத் தேவைப்பட்டாலும் அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் உள்ள ஊழியர்களுக்கு குடியிருப்பு கட்டிக்கொடுக்க திட்டம் துவங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வாணியம்பாடியில் கழிவுநீரை அப்புறப்படுத்தும் திட்டம்.

*வினா எண் 656—திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தோல்மண்டி உரிமையாளர்கள் பாரத் லெதர் கார்ப்பரேஷன் நிதி உதவியுடன் கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டத்திற்கு அரசிடம் நிதி உதவி கோரி னார்களா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நட வடிக்கை யாது?